பொருட்காட்சி அமைவதால் இங்கே போகவேண்டும் என்கிற எண்ணத்தைத் தூண்டுவதாக இது அமையும். மேலும் அண்ணா நகரில் குடியிருப்புகள் தற்போது அதிகமாகிவிட்டன. அதுவும் பொருட்காட்சி என்று 1½ மாதங்கள் பல விழாக்களோடு நடைபெறுவதால் அங்கு குடியிருப்பவர்களுக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது என்று பல மகஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உள்ளடக்கித்தான் தற்போது பரீட்சார்த்தமாக இந்த ஆண்டு போர் நிறுத்த நினைவு மண்டபத்திற்கு மேற்குப் பகுதியில் உள்ள இடத்தில் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இதுவே நல்ல இடமாக அமைந்தால், எதிர் காலத்தில் இங்கே நிரந்தரமாக அமையத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய சுற்றுலா வளர்ச்சிக்கழகம் முன்வரும்.

Recognised Medical Colleges.

* 284 *Q.*—THIRU N. DENNIS

THIRU N. KITTAPPA: Will the Hon. the **Minister** for Health be pleased to state—

(*a*) the Medical Colleges in the State for which recognition of the Indian Medical Council has been obtained; and

(*b*) the steps taken by the Government to get recognition for the remaining colleges?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயமுத்தூர்.

(இ) செங்கற்பட்டிலுள்ள செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கும், திருநெல்வேலியிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கும் ஏற்பளிப்பது குறித்து இந்திய மருத்துவ மன்றத்திற்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: ஏற்பளிப்புப் பெற வேண்டிய எஞ்சிய மருத்துவக் கல்லூரிகளுக்கு, அத்தகைய ஏற்பளிப்பு வழங்குவதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் அறிவிக்க இயலுமா?

1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு கல்லூரி தொடங்கப்பட்டு, அந்தக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட வேண்டிய எல்லாவிதமான வசதிகளும், கட்டிடங்களும், பிற ஆய்வுப் பகுதிகளும் முறையாக உருவான பின்னர்தான் அதை அங்கீகரிப்பது என்கிற முறையை இந்திய மருத்துவ மன்றம் வைத்துக்கொண்டுள்ளது. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி அந்தத் தகுதிகளை எல்லாம் பெறக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது. நெல்லை கல்லூரியும் அந்த நிறைவைப் பெறக்கூடிய நிலையைப் பெற்றுவிடும். ஆகவே இவற்றைப் பரிசிலனை செய்து, இவற்றுக்கும் ஏற்பளித்துவிடுவார்கள் என்று நம்புகிறோம்.

சென்னையில் மலேரியா நோய்த் தடுப்பு.

*285 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை நகரில் இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மீண்டும் மலேரியா நோய் பரவியதா?

(இ) ஆமெனில், அதைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) விவர அறிக்கை *யொன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சென்னை நகரில் இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மலேரியா நோய் பரவிய காரணத்தினால் எத்தனைபேர் இறந்துவிட்டனர் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எத்தனைபேர் இறந்தனர் என்கிற விவரம் இல்லை. ஆனால் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ மனைக்கு வந்து சிகிச்சை பெற்றவர்கள் எண்ணிக்கை ஜூலை மாதம் 2758 பேர்கள். ஆகஸ்டு மாதம் 4342 பேர்கள்.

[* 400-401-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.]